ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2298/55 - 2022 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.09.23
*2298/55 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டு முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 23.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2022 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தஞ் செய்யப்பட்ட, 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி கொண்ட 2231/18 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள், இதன் மூலம் மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

1A - PG 5982 — 406 (2022/09)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. மேலே குறிப்பிடப்பட்ட 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளில் 8ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்ததோ, அவ்வொழுங்கு விதிகளில் I அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்ட, **8702.40.19**, **8702.40.39**, **8702.40.59**, **8703.80.31**, **8703.80.32**, **8703.80.33**, **8703.80.34**, **8704.90.31**, **8704.90.32**, **8704.90.33**, **8704.90.34**, **8711.60.10** போன்ற இயைபு முறைக்குறியீட்டு இலக்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் மோட்டார் வாகனங்கள், திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31ஆந் திகதிய தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் 02/2022 ஆம் இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தின் படி “வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம்” பெற்றுள்ள எந்தவொரு தகுதியினையும் கொண்ட நபர் ஒருவர் மூலம் இறக்குமதி செய்வதற்காக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் விமான ஏற்று பொருளூண்டியல் அல்லது கப்பல் ஏற்று பொருளூண்டியல் திகதிக்கு முன்னர் நிறுவப்பட்டு அனுமதிப்பட்ட கடன்(பற்று)க் கடிதம் ஒன்றினை (எல்.ஸீ) உட்பட மேலே குறிப்பிடப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள ஒழுங்குகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவதன் மூலம் அனுமதி வழங்கப்படும்.

4. மேலே குறிப்பிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகளில் 8ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்கு விதியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்ததோ,அவ்வொழுங்கு விதிகளில் I ஆவது அட்டவணையில் பட்டியல்படுத்தப்பட்டு, **8702.40.19**, **8702.40.39**, **8702.40.59**, **8703.80.31**, **8703.80.32**, **8703.80.33**, **8703.80.34**, **8704.90.31**, **8704.90.32**, **8704.90.33**, **8704.90.34**, **8711.60.10** போன்ற எச். எஸ். குறியீட்டு இலக்கங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இலத்திரனியல் மோட்டார் வாகனங்கள், திருத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31ஆம் திகதிய தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் 02/2022 இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தின் படி “மாதிரி அல்லது காட்சிப்படுத்தும் நோக்கத்திற்காக மாதிரியாக இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்களுக்காக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம்” பெற்றுள்ள மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தியாளரின் எந்தவொரு அதிகாரம் பெற்ற முகவர் /அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர் ஒருவருக்கு மூலம் இறக்குமதி செய்வதற்காக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் விமான ஏற்று பொருளூண்டியல் /கப்பல் ஏற்று பொருளூண்டியல் திகதிக்கு முன்னர் நிறுவப்பட்டு அனுமதிப்பட்ட கடன்(பற்று)க் கடிதம் ஒன்றினை (எல்.ஸீ) உட்பட மேலே குறிப்பிடப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டு உள்ள ஒழுங்குகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்குவதன் மூலம் அனுமதி வழங்கப்படும். இவ்வொழுங்கு விதிகளின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரம் பெற்ற முகவர் ஒருவருக்கு அல்லது அதிகாரம் பெற்ற விநியோகஸ்தர் ஒருவருக்கு அதிக பட்சமாக இலத்திரனியல் மோட்டார் வாகன ரக (03) மூலம் சாம்பல்களின் எண்ணிக்கையினை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

5. இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் மேலே உள்ள ஒழுங்கு விதி இலக்கம் 3 மற்றும் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் வாகன சுங்கத் தீர்வைக்காக எச்.எஸ். 87ஆம் அத்தியாயத்தின் கீழ் வகைப்படுத்தக் கூடிய மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்யும் போது உரியவாறாகக் காணப்படுகின்ற சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

6. இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் இவ்வொழுங்கு விதிகளில் ஊழல்களை மேற்கொள்வது தொடர்பில் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் உரிய சட்டங்களில் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

7. தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் 02/2022 ஆம் இலக்கம் கொண்ட சுற்று நிருபத்தின் படி ஒழுங்குகள் மற்றும் நிபந்தனைகளின் படி ஏதேனும் பொருள் அல்லது பொருட்கோடல் காணப்படின், தொடர்பில் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. இலங்கை சுங்க பணிப்பாளர், அனுமதியாளரின் பெயர், விலாசம், இறக்குமதி அனுமதிக்கப்பட்ட வாகன இலக்கம், வாகன வகை, பெறுமதி மற்றும் இந்த ஒழுங்குவிதிகளுக்கமைந்த அத்தகைய இலத்திரனியல் வாகன இறக்குமதி திகதி உட்பட்ட மாதாந்த அறிக்கையை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு பிரதி செய்து தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயளாலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்

9. இந்த ஒழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை மாத்திரமே அமுலிலிருக்கும்.

EOG 09 - 0302

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.